**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No. 312/2022**

PW-3

| | | | |
|---|---|---|---|
| Name | பிரதீப் குமார்(PW3) | | |
| Father's Name | வேல்ராஜ் | தொழில் | |
| Village | சேவூர் | | |
| Taluk | அவிநாசி | Age | 26 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of August 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் செல்வராஜ் எனது மாமா ஆவார். எனது மாமா செல்வராஜ் சதீஷ்குமார் இடம் 5000 ரூபாய் கடன் வாங்கி இருந்தார். அதில் நான்காயிரம் ரூபாயை 03.08.2022ம் தேதி காலை என் மாமா சதீஷ்குமார் இடம் கொடுத்து விட்டார். மீதி ஆயிரம் ரூபாயை கொடுக்காமல் இருக்கிறார் என்று சொல்லி எதிரிகள் இருவரும் எனக்கு போன் செய்து என் மாமா பணம் கொடுக்கவில்லை என்றால் அவரை கொன்று விடுவதாக மிரட்டினார்கள். அந்த தகவலை நான் என் மாமாவிற்கு ஃபோன் செய்து சொன்னேன். இரவு ஏழு முப்பது மணி அளவில் எனது அத்தை எனக்கு போன் செய்து என் மாமா செல்வராஜ் ஸ்ரீனிவாசா நகைக்கடை முன்பாக எதிரிகள் என்மாமாவை அடிப்பதாக தகவல் சொன்னார். நான் அருகில் இருந்ததால் உடனே சென்று விட்டேன். என் தம்பி நவீன் குமாருக்கும் என் அத்தை போன் செய்து வர சொன்னதன் பேரில் அவரும் அங்கே வந்துவிட்டார். சண்டையை விலக்கிவிட்டு நாங்கள் என் மாமாவை அழைத்துக் கொண்டு வரும்போது சதீஷ்குமார் அருகில் வேலை நடந்து கொண்டு இருந்த ஒரு கட்டிடத்தில் இருந்து இரும்பு கம்பி ஒன்றரை எடுத்து வந்து என் தம்பியின் இடது காதில் அடித்துவிட்டார். காது இரண்டாக கிழிந்து விட்டது இடது தாடையில் காயம் ஏற்பட்டது. அதில் என் தம்பி மயக்கமடைந்து விழுந்துவிட்டார். தனியார் ஆம்புலன்ஸ் மூலம் என் தம்பி நவீன் குமாரை அன்னூர் எஸ் எம் எஸ் மருத்துவமனைக்கு அழைத்து போய் சிகிச்சைக்கு சேர்த்தோம். சதீஷ்குமார் என் தம்பி நவீன் குமாரை அடிக்க பயன்படுத்திய இரும்பு கம்பியை பார்த்தால் என்னால்

அடையாளம் சொல்ல முடியும். அது தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்து மறுநாள் காலை போலீசார் என்னை எஸ்எம்எப் மருத்துவமனையில் வைத்து காலை 11 மணியளவில் விசாரித்தார்கள். காவல் துறையினருக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் மருத்துவமனையில் இருந்து தகவல் கொடுத்தார்கள். 03.08.2022 தேதி சதீஷ்குமாரை என் மாமா வீட்டில் வைத்து பணம் கேட்கவில்லை என்றால் சரிதான்.என் மாமா பணம் ரூபாய் 4000 திருப்பி கொடுத்த போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் இருந்து என் தம்பியை மருத்துவமனைக்கு அழைத்து சென்ற சமயத்தில் ஏதாவது முதலுதவி சிகிச்சை கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை நேரடியாக மருத்துவமனைக்கு தான் அழைத்து சென்றோம். நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும் என் மாமாவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆம்புலன்ஸ் எத்தனை மணிக்கு வந்தது என்றால் எட்டு மணிக்கு வந்தது. ஆம்புலன்ஸில் தம்பியுடன் யார் யார் சென்றோம் என்றால் என் அம்மா அப்பா சென்றார்கள் நான் செல்லவில்லை. ஆம்புலன்ஸ் எதுவும் வரவில்லை என்றும் நாங்களாக ஒரு கதையை உருவாக்கி தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |